பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

04 10 2025 SATURDAY 6.30 PM

# மாநிலச் செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. நாட்டின் விடுதலைக்காக பாடுபட்ட திருப்பூர் குமரன், சுப்பிரமணிய சிவா ஆகியோரை நினைவுகூர்ந்து தாம் வணங்குவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. சுயசார்பு இந்தியா இயக்கத்தை வலுப்படுத்த, உள்ளூர் பொருட்களுக்கு அனைவரும் ஆதரவு அளிக்க வேண்டும் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக மாநில அமைச்சர் திரு துரைமுருகன் கூறியுள்ளார்.

4. தமிழகத்தின் ஒரு சில இடங்களில் அடுத்த இரு தினங்களுக்கு மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. வெஸ்ட் இண்டீஸுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா ஒரு இன்னிங்ஸ் மற்றும் 140 ரன் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

--- இனி விரிவான செய்திகள் ----

<<<<>>>>>

நாட்டின் விடுதலைக்காகவும், தேசப்பற்று உணர்வை விதைப்பதற்கும் தங்களின் வாழ்வை அர்ப்பணித்த திருப்பூர் குமரன், சுப்பிரமணிய சிவா ஆகியோரை நினைவுகூர்ந்து வணங்குவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

விடுதலை போராட்ட வீரர்கள் திருப்பூர் குமரன் மற்றும் சுப்பிரமணிய சிவாவின் பிறந்த தினத்தையொட்டி, பிரதமர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில் இதனை குறிப்பிட்டுள்ளார்.

திருப்பூர் குமரன், தமது இறுதி மூச்சு வரை தேசியக்கொடியை ஏந்தி உயிர்தியாகம் செய்ததன்மூலம், அசாத்திய துணிச்சலையும், தன்னலமற்ற தியாகத்தையும் வெளிப்படுத்தியதாக பிரதமர் தெரிவித்துள்ளார்.

சுப்பிரமணிய சிவாவின் தைரியமான எழுத்து மற்றும் அனல் பறக்கும் பேச்சின் மூலம் எண்ணற்ற இளைஞர்கள் இடையே தேசப்பற்றை விதைத்ததாக பிரதமர் கூறியுள்ளார்.

இந்த இரு மாமனிதர்களின் முயற்சிகள் நம் அனைவரின் நினைவிலும் நீக்கமற நிறைந்திருப்பதுடன், ஆங்கிலேயே ஆட்சியில் இருந்து நமது விடுதலையை உறுதி செய்த ஏராளமான மக்களின் போராட்டங்களையும், இன்னல்களையும் நமக்கு நினைவுபடுத்துவதாக அவர் கூறியுள்ளார்.

தேச ஒற்றுமை மற்றும் வளர்ச்சியை நோக்கி நாம் அனைவரும் முன்னேற திருப்பூர் குமரன், சுப்பிரமணிய சிவா பங்களிப்புகள் நமக்கு தொடர்ந்து ஊக்கம் அளிக்கட்டும் என்றும் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

தமிழக ஆளுநர் திரு ஆர் என் ரவி வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், ஆங்கிலேயே ஆட்சியை எதிர்த்து துணிச்சலுடன் போராடிய திருப்பூர் குமரன் மற்றும் சுப்பிரமணிய சிவாவின் தியாகத்தை இந்நாளில் நினைவுகூர்வதாக குறிப்பிட்டுள்ளார்.

அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள செய்தியில், திருப்பூர் குமரனின் வீரத்தையும், தியாகத்தையும் போற்றி வணங்குவதாக தெரிவித்துள்ளார்.

<<<<>>>>>

சுயசார்பு இந்தியா இயக்கத்தை வலுப்படுத்த, உள்ளூர் பொருட்களுக்கு அனைவரும் ஆதரவு அளிக்க வேண்டும் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கேட்டுக்கொண்டுள்ளார்.

ஆந்திர மாநில பிஜேபி சார்பில் திருப்பதியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த காதி சாந்தா நிகழ்ச்சியில் தாம் பங்கேற்றதை சமூக வலைதள பதிவில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஐந்தாண்டுகளுக்கு முன்பு சுயசார்பு இந்தியா என்னும் தொலைநோக்கு இயக்கத்தை பிரதமர் தொடங்கிவைத்ததை அமைச்சர் நினைவுகூர்ந்துள்ளார்.

நாடு முழுவதும் உள்ள விவசாயிகள், கைவினைக் கலைஞர்கள் மற்றும் குறு-சிறு தொழில் நிறுவனங்களை ஊக்குவிக்க, அனைவரும் உள்ளூர் பொருட்களுக்கு ஆதரவு அளித்து இந்தியாவை வலுப்படுத்துவோம் என்றும் டாக்டர் எல். முருகன் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>>

வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு துரைமுருகன் கூறியுள்ளார்.

வேலூர் மாவட்டம் காட்பாடி அருகே சேர்க்காட்டில் நடைபெற்ற மருத்துவ முகாமில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கிய பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

நீர்நிலைகளை தூர்வாருதல், அவற்றின் கரைகளை பலப்படுத்துதல், கால்வாய்கள் தூர்வாருதல் போன்ற பணிகள் மூலம் இந்தாண்டு எந்த அளவு மழை பெய்தாலும், அதனை எதிர்கொள்ள அரசு தயாராக உள்ளது என்று அமைச்சர் கூறினார்.

மேலும் 30 கோடி ரூபாய் செலவில் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதுடன், நீர்வழிப்பாதைகளை செப்பனிடுதல், புதிய கால்வாய்களை ஏற்படுத்துதல் ஆகியவற்றுக்காக 160 கோடி ரூபாய் செலவில் திட்டம் செயல்படுத்தப்பட்டிருப்பதாகவும் திரு துரைமுருகன் தெரிவித்தார்.

<<<<>>>>>

மதுரை மீனாட்சியம்மன் கோவில் குடமுழுக்கு அடுத்த ஆண்டு பிப்ரவரியில் நடைபெறும் என்று மாநில இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

மதுரையில், இதுதொடர்பாக மாநில அமைச்சர் திரு மூர்த்தி மற்றும் அறநிலையத்துறை உயரதிகாரிகளுடன் அவர் ஆலோசனை நடத்தினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய திரு சேகர்பாபு, தற்போது மீனாட்சியம்மன் கோவிலில் நடைபெற்றுவரும் புனரமைப்புப் பணிகள் டிசம்பர் மாதத்திற்குள் நிறைவடையும் என்று தெரிவித்தார்.

<<<<>>>>>

பிஜேபி மாநில நிர்வாகிகள் மற்றும் மாவட்ட தலைவர்கள் ஆலோசனைக்கூட்டம் சென்னையில் இன்று நடைபெற்றது.

அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள சட்டப்பேரவைத் தேர்தலுக்கான உத்தி குறித்து இந்த கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டதாக அக்கட்சியின் மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன் சமூக வலைதள பதிவில் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>>

தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளின் ஒரு சில இடங்களில் அடுத்த இரு தினங்களுக்கு மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசிய அவர் இதனை தெரிவித்தார்.

*(Sound Byte – செந்தாமரை கண்ணன் - 45 Sec. )*

<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

கரூர் கூட்ட நெரிசல் சம்பவ இடத்தை தேசிய பட்டியல் சமூக ஆணையத்தின் தலைவர் திரு கிஷோர் மக்வானா நேரில் பார்வையிட்டு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறினார்.

-----------------

ராமநாதபுரத்தில் மாநில அளவிலான கைத்தறி கண்காட்சியை அமைச்சர் திரு ஆர் காந்தி இன்று தொடங்கிவைத்தார்.

----------------

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி அரசு மருத்துவமனையில் மனநல அவசர சிகிச்சை மற்றும் மீள் மையத்தை மாநில அமைச்சர் திரு டி ஆர் பி ராஜா தொடங்கிவைத்தார்.

--------------

கிண்டி அரசினர் தொழிற்பயிற்சி நிலைய பட்டமளிப்பு விழாவில் மாநில அமைச்சர் திரு சி வி கணேசன் கலந்துகொண்டு மாணவர்களுக்கு பாராட்டு சான்றிதழை வழங்கினார்.

-----------------

திருச்சி மாவட்டம் சோமரசம்பேட்டையில் 30 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான சித்த மருத்துவ கட்டிடத்திற்கு மாநில அமைச்சர் திரு கே என் நேரு அடிக்கல் நாட்டினார்.

-----------------

காஞ்சிபுரம் மாவட்டம் குன்றத்தூர் அருகே கோவூரில் நடைபெற்ற மருத்துவ முகாமில் மாநில அமைச்சர் திரு தா மோ அன்பரசன் பங்கேற்று பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

-------------------

அரியலூர் மாவட்டத்தில் சொட்டுநீர் பாசன வசதியுடன் மரக்கன்றுகள் நடும் பணியினை ஆட்சியர் திரு ரத்தினசாமி தொடங்கிவைத்தார்.

-----------------

விழுப்புரம் மாவட்டம் கண்டமங்கலம் ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட பகுதிகளில் மத்திய அரசின் வளர்ச்சித் திட்டங்களின் செயலாக்கம் குறித்து ஆட்சியர் திரு ஷேக் அப்துல் ரகுமான் ஆய்வு செய்தார்.

------------------

தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி அலுவலர்கள் சார்பில் தூய்மையே சேவை இயக்க விழிப்புணர்வு பேரணி இன்று சேலத்தில் நடைபெற்றது.

-------------------

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியில் ஒரு லட்சம் பனை விதைகளை நடவு செய்யும் பணி இன்று தொடங்கியுள்ளது.

-----------------

தேனி மாவட்டம் மேகமலை அருவியில் வெள்ளப்பெருக்கு காரணமாக சுற்றுலாப்பயணிகள் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

வெஸ்ட் இண்டீஸுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா ஒரு இன்னிங்ஸ் மற்றும் 140 ரன் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

அகமதாபாதில் நடைபெற்ற இப்போட்டியில், மூன்றாவது நாளான இன்று வெஸ்ட் இண்டீஸ் தனது இரண்டாவது இன்னிங்கில் 146 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

முன்னதாக, இந்தியா தனது முதல் இன்னிங்சில், 5 விக்கெட் இழப்பிற்கு 448 ரன் எடுத்திருந்தபோது ஆட்டத்தை முடித்துக்கொள்வதாக அறிவித்தது.

வெஸ்ட் இன்டீஸ் முதல் இன்னிங்சில் 162 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

------------------

ஆஸ்திரேலியா அணிக்கு எதிரான கிரிக்கெட் போட்டித் தொடரில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒருநாள் கிரிக்கெட் போட்டிக்கான அணிக்கு சுப்மன் கில்லும், டுவென்டி – டுவென்டி கிரிக்கெட் போட்டிக்கான அணிக்கு சூரியகுமார் யாதவும் கேப்டனாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

-----------------

Al Ain மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Shriyanshi Valishetty இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

ஐக்கிய அரபு எமிரேட்ஸில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர், 21-11, 21-12 என்ற செட் கணக்கில், இந்தோனேஷியாவின் Chiara Marvella-வை வென்றார்.

------------

அமெரிக்காவில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Dakshineshwar Suresh – அமெரிக்காவின் Andrew Delgado இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

-----------

புரோ கபடி லீக் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களில் புனே – ஜெய்பூர் அணியையும், குஜராத் – பெங்கால் அணியையும் எதிர்கொள்கின்றன.

<<<<>>>>>